# தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகம்
# போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு
# வெற்றிடங்கள்

1997 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகச் சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்டுள்ள போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் கீழ் தொழிற்படுகின்ற நிறுவனமாக காணப்படுகின்ற அதேவேளையில், ஒவ்வொரு வழிச்செலுத்துகைக்குப் பின்னாலும் ஆரோக்கியமான சாரதி ஒருவரை அமர்த்துதல் எமது நோக்கமாகும்.

போக்குவரத்து மருத்துவ துறையின் முன்னோடி என்ற வகையில், எமது நிறுவனம் மேற்குறிப்பிட்ட நோக்கத்தை அடைந்து கொள்வதற்கு தொழில் வல்லுநர்களின் பங்களிப்பு தேவையாக இருக்கின்ற படியினால் பின்வரும் வெற்றிடமாகியுள்ள பதவிகளுக்காக நிரந்தர அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கு இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் அல்லாத) மற்றும் ஆய்வுகூட உதவியாளர்**

## 1. மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்ப வியலாளர் - MA4 - வெற்றிடங்களின் எண்ணிக்கை 01

**தகைமை**

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள் (பின்வரும் தகைமைகளில் 1 அல்லது 2)**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்ப விஞ்ஞானி பட்டமொன்றை பெற்றிருத்தல் மற்றும் ஆய்வுகூட தொழில்நுட்ப விஞ்ஞானியாக இலங்கை மருத்துவ மன்றத்தில் பதிவு செய்திருத்தல்.
2. இலங்கை மருத்துவ மன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு நிறுவனத்திலிருந்து மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்ப விஞ்ஞானி பதவிக்கு உரியதாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட தொழில் சான்றிதழ் அல்லது டிப்ளோமா சான்றிதழ் ஒன்றை பெற்றிருத்தல் மற்றும் ஆய்வுகூட தொழில்நுட்ப விஞ்ஞானியாக இலங்கை மருத்துவ மன்றத்தில் பதிவு செய்திருத்தல்.

**உள்வாரியான விண்ணப்பதாரர்கள்**

1. மேலே குறிப்பிடப்பட்டுள்ள வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

- வயது: 22 வயதிற்கு குறையாதவராக இருக்க வேண்டிய அதேவேளையில் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்வாரியான விண்ணப்பதாரர்களுக்கான உயர்ந்தபட்ச வயது எல்லை ஏற்புடையதாகாது.

- **சேவை வகுதிக்குரிய சம்பள குறியீட்டு இலக்கம் மற்றும் மாதாந்த சம்பள அளவுத்திட்டம்**

| | |
|---|---|
| சம்பள அளவுத்திட்டம்<br><br>2025.03.25 ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இல.: 01/2025 இன் II ஆவது அட்டவணையின்படி சம்பளக் கொடுப்பனவு மற்றும் பதவிக்கு உரித்தான ஏனைய கொடுப்பனவுகளும் உரித்தாகும். | MA 4<br>ரூபா 64,320 – 10×1,360 – 15×1,670 – 5×2,040 – 113,170 |

(முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இல.: 01/2025 இன்படி இந்தச் சம்பளம் 2027.01.01 ஆம் திகதியிலிருந்து ஏற்புடையதாகும். 2025.04.01 ஆம் திகதியிலிருந்து செலுத்தப்படும் சம்பளம் ரூபா 52,875 ஆகும்.

## 2. முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் இல்லாத) –MA 1-1 -வெற்றிடங்களின் எண்ணிக்கை 12

**தகைமை**

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

1. கல்வி பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சையில் சிங்களம்/ தமிழ் மற்றும் கணிதம் ஆகிய பாடங்கள் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமை சித்திகளை கொண்டதாக ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.
2. கல்விப் பொதுத் தராதர (உயர் தரப்) பரீட்சையில் குறைந்தபட்சம் மூன்று பாடங்களில் (சாதாரண பொதுப்பரீட்சை தவிர்ந்த) சித்தியடைந்திருத்தல்.
3. அங்கீகரிக்கப்பட்டுள்ள கணினி கற்கைநெறி ஒன்றை பயின்றிருத்தல்.

**உள்வாரியான விண்ணப்பதாரர்கள்**

1. ஆரம்பத் தரம் - தேர்ச்சியற்ற, பகுதியளவு தேர்ச்சியுள்ள, தேர்ச்சிபெற்ற சேவை வகுதிகளில் பின்வரும் '2','3','4' மற்றும் '5' ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை கொண்டுள்ள ஊழியர்களுக்கு இதற்காக விண்ணப்பிக்க முடியும்.
2. கல்வி பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சையில் சிங்களம்∴ தமிழ் மற்றும் கணிதம் ஆகிய பாடங்கள் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமை சித்திகளை கொண்டதாக ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.
3. அங்கீகரிக்கப்பட்டுள்ள கணினி கற்கைநெறி ஒன்றை பயின்றிருத்தல்.
4. சேவையில் நிரந்தர பதவியை வகிக்க வேண்டிய அதேவேளையில், அந்தப் பதவிகளில் நிரந்தரமாக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
5. உரிய திகதிக்கு மிகவும் கிட்டிய திகதியில் நிரந்தர பதவி ஒன்றில் 05 வருடங்கள் தொடர்ச்சியான, திருப்திகரமான சேவை காலத்தை பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

## 3. ஆய்வுக்கூட உதவியாளர் MA 1-1 -வெற்றிடங்களின் எண்ணிக்கை 01

**தகைமை**

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

1. கல்வி பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சையில் சிங்களம்/ தமிழ், கணிதம் மற்றும் விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமை சித்திகளை கொண்டதாக ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.
2. கல்விப் பொதுத் தராதர (உயர் தரப்) பரீட்சையில் குறைந்தபட்சம் மூன்று பாடங்களில் (சாதாரண பொதுப்பரீட்சை தவிர்ந்த) சித்தியடைந்திருத்தல்.
3. அங்கீகரிக்கப்பட்டுள்ள கணினி கற்கைநெறி ஒன்றை பயின்றிருத்தல்.

**உள்வாரியான விண்ணப்பதாரர்கள்**

1. ஆரம்பத் தரம் - தேர்ச்சியற்ற, பகுதியளவு தேர்ச்சியுள்ள, தேர்ச்சிபெற்ற சேவை வகுதிகளில் பின்வரும் '2','3','4' மற்றும் '5' ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை கொண்டுள்ள ஊழியர்களுக்கு இதற்காக விண்ணப்பிக்க முடியும்.
2. கல்வி பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சையில் சிங்களம்∴ தமிழ் கணிதம் மற்றும் விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் உட்பட 04 பாடங்களில் திறமை சித்திகளை கொண்டதாக ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.
3. அங்கீகரிக்கப்பட்டுள்ள கணினி கற்கைநெறி ஒன்றை பயின்றிருத்தல்.
4. சேவையில் நிரந்தர பதவியை வகிக்க வேண்டிய அதேவேளையில், அந்தப் பதவிகளில் நிரந்தரமாக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
5. உரிய திகதிக்கு மிகவும் கிட்டிய திகதியில் நிரந்தர பதவி ஒன்றில் 05 வருடங்கள் தொடர்ச்சியான, திருப்திகரமான சேவை காலத்தை பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

- வயது: 18 வயதிற்கு குறையாதவராக இருக்க வேண்டிய அதேவேளையில் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்வாரியான விண்ணப்பதாரர்களுக்கான உயர்ந்தபட்ச வயது எல்லை ஏற்புடையதாகாது.

- **சேவை வகுதிக்குரிய சம்பள குறியீட்டு இலக்கம் மற்றும் மாதாந்த சம்பள அளவுத்திட்டம் :-**

| | |
|---|---|
| சம்பள அளவுத்திட்டம்<br><br>2025.03.25 ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இல.: 01/2025 இன் II ஆவது அட்டவணையின்படி சம்பளக் கொடுப்பனவு மற்றும் பதவிக்கு உரித்தான ஏனைய கொடுப்பனவுகளும் உரித்தாகும். | MA 1-1<br>ரூபா 46,220-10× 540-7×630- 4×890- 20×1,190-83,390 |

(முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இல.: 01/2025 இன்படி இந்தச் சம்பளம் 2027.01.01 ஆம் திகதியிலிருந்து ஏற்புடையதாகும். 2025.04.01 ஆம் திகதியிலிருந்து செலுத்தப்படும் சம்பளம் ரூபா 40,403 ஆகும்.

**மேற்குறிப்பிட்ட பதவிகளுக்குத் தேவையான பொதுவான தகைமைகள்:-**

சகல விண்ணப்பதாரர்களும்

i. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

ii. பதவிக்காக ஒப்படைக்கின்ற பணிகளை சிறந்த முறையில் நிறைவேற்றுவதற்கும் அதேபோன்று நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்குத் தேவையான உடல் மற்றும் உளத் தகுதியினைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

iii. சிறந்த நடத்தையைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

தகைமையுள்ளவர்களைத் தெரிவுசெய்வது சம்பந்தமான இறுதித் தீர்மானம் தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகத்தைச் சார்ந்ததாகும்.
சகல சுய விபரத் தகவல்களையும் உள்ளடக்கியதாக விண்ணப்பங்களைத் தயாரித்து தொடர்புடைய சான்றிதழ்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் உறவினரல்லாத இருவரின் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் ஆகியவற்றைக் கொண்டதாக பின்வரும் முகவரிக்கு 2026.05.09 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பிக்கின்ற பதவியையும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் மாத்திரம் அனுப்புதல் வேண்டும்.

தலைவர்,
தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகம்,
இல. 170, ஹய்லெவல் வீதி,
நுகேகொடை.
தொலைபேசி **:- 011 2852868**